## பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களால் உண்டாகும் பாதிப்புக்களை குறைக்க முயல்வோம்

### 1.) R- REFUSE (நிராகரித்தல்)

- பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையை நிராகரித்தல்
- சூழலுக்கு பாதிப்பில்லாததும் இலகுவாக உக்கக்கூடிய முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை பாவித்தல்



### 2.) R- REDUSE (குறைத்தல்)

- தேவையான போது மட்டும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை பாவித்தல்






### 3.) R- REUSE (மீள்பாவனை)

- முதற்பாவனையின் பின் வீசாமல் தவிர்த்தல்
- மீண்டும் மீண்டும் பயன்படுத்தி கழிவுகளை குறைத்தல்



### 4.) R- RECYCLE (மீள் சுழற்சி)

- கழிவுகளை தரம்பிரித்து வழங்கல்
- தேவையான போது மீள் சுழற்சிக்குட்படுத்தல்
- எமது பிரதேச மீள் சுழற்சி நிலையங்களில் இருந்து தேவையான அறிவை பெற்றுக் கொள்ளல்.






# பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் புகைப்பேய்க்கு நீங்களும் பாதிக்கப்படுகின்றீர்களா?

சுற்றுச்சூழல் மற்றும் தொழில்சார் சுகாதாரப் பணியகம்
சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

## நீங்கள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை பின்வரும் முறையில் எரிக்கின்றீர்களா?

**1. பாரம்பரிய முறையில் சமைக்கும் போது, தீ பற்றவைப்பதற்கு பொலித்தீன் பைகள், லஞ் சீட், யோகட் கப் போன்றவற்றை பயன்படுத்துதல்.**

- இந்த நச்சுத்தன்மையான புகைக்கு இல்லத்தலைவி நேரடியாக உள்வாங்கப்படுவதுடன் மேலும் அந்தச் சூழலிலுள்ள சிறுவர்களும் மற்றையவர்களும் ஆபத்தான நச்சுப் பொருட்களுக்கு உள்வாங்கப்படுகின்ற அபாயகரமான நிலையில் இருக்கின்றனர்.



**2. வெளிப்புறச் சூழலில் திறந்த நிலையில் பற்றவைத்தல்.**

- கழிவு முகாமையில் இலகுவான முறையாக மக்கள் திறந்த எரிப்பூட்டலை பயன்படுத்துகின்றனர்.
- சிலவேளைகளில் மக்கள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை கழிவு கொட்டும் இடங்களில் பற்றவைத்தல்.
- இவ்விச வாயுப் புகைகள் இலகுவாக காற்றுடன் பரவக்கூடியவையாகும்.



## பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பதால் மனிதனுக்கு தீமையான நஞ்சு வாயுக்கள் உண்டாக காரணமாகும்

**இந்தப் புகையில பின்வரும் இரசாயண் பொருட்கள உள்ளடக்கப்பட்டுள்ளன.**

- காபன்மெனோட்சைட்டு
- டையொட்சின் மற்றும் பையுரன்ஸ்
- பொலிநியூகிளியர் அரோமற்றிக் கைதரோகாபன்
- விசேடமான பொருட்கள்

**மேற்குறிப்பிட்ட இரசாயண பொருட்கள் மனிதனுக்கு மிகவும் நச்சுத்தன்மையானவை மற்றும் பின்வரும் நோய்களையும் சுகாதார பாதிப்புக்களையும் உண்டாக்கும்.**



- சுவாச புற்றுநோய்
- பாரிசவாதம் / நரம்புத்தளர்ச்சி
- இருதய நோய்கள்
- சுவாச நோய்கள்
- பிறப்பு குறைபாடுகள் மற்றும் குறைவான நிறையுடைய குழந்தைகள்

விசேடமாக

- சிறுவர்கள்
- கர்ப்பணித் தாய்மார்கள்
- சுவாசம் சம்பந்தமான குறைபாடுடைய நோயாளிகள்
- அதிகளவிலான ஆபத்தைக் கொண்ட இருதய நோயாளிகள்